# சுஜாதாவின் சிறுகதைகளில் புலப்படும் விண்வெளிஅறிவியல்

***முனைவர் கரு. முருகன்***
தமிழ் உயராய்வு மையம்
ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி
தேவகோட்டை

***பி. கலைச்செல்வி***
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் உயராய்வு மையம்
ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி
தேவகோட்டை

**மலர்: 4**

**இதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2019**

**ISSN: 2454-3993**

சிறுகதை நவீன கால வாழ்வியல் போக்குகளைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாக் வளர்ந்து வருகிறது. தற்கால அறிவியல் வளர்ச்சியோ இலக்கியங்களும் இயைந்தே பயணிக்கின்றன. இதில் அறிவியல் கோட்பாடுகளை மீறாமலும் இலக்கியக் கட்டமைப்பைச் சிதைக்காமலும் அமையப்பெறுவது என்பது பெரிய உத்தியாகும். இவ்வுத் தியினைத் தனது படைப்புகளில் சரியாகப் பயன்படுத்தியிருப்பவர் சுஜாதா ஆவார். அறிவியலின் ஆதிக்கம் அனைத்துத் துறைகளிலும் இன்றைய சுழலில் அதிகரித்து வருகிறது. இவற்றை உள்ளடக்கிய படைப்புக்கள், அறிவியல் இலக்கியம் என்று அழைக்கப்படுகின்றன. இவை அறிவியலையும் இலக்கியத்தன்மையையும் ஒருங்கிணைந்து அமையப்பெறுகின்றன சுஜாதாவின் சிறுகதைகளில் சிறப்பு, அறிவியல் அறிஞர்களின் தத்துவங்கள் சமுதாயத்திற்கு உணர்த்தவிரும்பும் செய்திகளை என இக்கட்டுரை விளக்குகிறது. சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள கருத்துகளையும் அவை புலப்படுத்துவதற்காக கையாளப்படும் நெறிகளையும் ஆய்வின் மூலம் வெளிப்படுத்தும் நோக்கமாக அமைகின்றது.

### விண்வெளி ஆராய்ச்சி

வெட்டவெளியும், அதனுள் அடங்கியிருக்கும் அண்டங்கள்யாவும் சேர்ந்தது அகிலம் (universe) என்பதாகும். சூரியக்குடும்பம், அதன் இயக்கம், வான்வெளி மண்டலம் ஆகியனவற்றைக் குறிக்கும் அறிவை எடுத்துரைப்பதாய் அமைகின்றது.

அறிவியல் வளர்ச்சி அனைத்துத்துறைகளிலும் அதிகரித்துவரும் இன்றைய சூழலில் விண்வெளி ஆராய்ச்சி, விண்வெளிப் பயணம் குறித்த கருத்துக்களையும், கற்பனைகளையும் அறிவியல் சிறுகதைகள் பதிவு செய்துள்ளன. சுஜாதாவின் "மற்றொரு பாலு" என்னும் சிறுகதையும், "விண்கோள்" என்னும் சிறுகதையும், "நேற்று வருவேன்" என்னும் சிறுகதையும் குறிப்பிடத்தக்கன.

விண்வெளியில் தொலைவுகளைக் குறிக்க "ஒளி வருடம்" என்னும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. ஒளியானது ஒரு விநாடிக்கு 3,00,000 கிலோ மீட்டர் செல்கின்றது. ஒரு வருடத்தில் ஒளி கடக்கும் தொலைவு ஒளி வருடம் என்றழைக்கப்படுகின்றது. மனிதனின் வெளி அமைப்பு, உள் அமைப்பு ஆகியவற்றை முழுமையாய் அறிந்து கொண்டு, அவற்றை செய்திவடிவில் கணிப்பொறியில் உள்ளீடு செய்து மற்றொரு கணிப்பொறிக்கு வழியாக அனுப்பி, அதன்மூலம் மனிதனின் மறு வடிவத்தை மறுமுனையில் பெறும் முயற்சி "தொலைகடத்தல்" என்றழைக்கப்படுகின்றது. இதனைத் தனது சிறுகதைகளில் அறிவியல் கூறுகளை மக்களுக்குப் புலப்படுத்தும் வகையில் சிறுகதைக்கான அமைப்பியலோடு வெளிப்படுத்து கிறார். "மற்றொருபாலு" என்னும் சிறுகதையில் இடம்பெறும் உரையாடல் விண்வெளிப் பயணத் தொலைவினை குறைக்கும் முயற்சியில் ஈடுபடும் ஆராய்ச்சியாளரின் செயல்பாடுகளை விவரிக்கின்றது.

### விண்கோள்

விண்கோள்கள் குறித்து "விண்கோள்கள்" என்னும் தலைப்பில் அமைந்த சிறுகதை எடுத்துரைக்கின்றது. "விண்கோள் என்பது விண்ணில் செல்லும் கோளத்தைக் குறிப்பிடுகிறது. பூமியைச் சுற்றி வந்து கொண்டிருக்கும் சந்திரன் ஓர் இயற்கைக்கோள் ஆகும். அதைப்போன்று பூமியைச் சுற்றி வரும்படி மனிதனால் தயாரிக்கப்பட்ட கோளிற்கு செயற்கை விண்கோள் என்று பெயர். "ஸ்புட்னிக் என்னும் உலகின் முதல் செயற்கை விண்கோளை விண்ணில் ஏவிய பெருமை சோவியத் ரஷ்யாவிற்கு உண்டு. சோவியத் விண்வெளி வீரரானயுரி ககாரின், வோஸ்டாக் என்ற ரஷ்ய விண்வெளி ஓடத்தில், உலகிலேயே முதல் முறையாகப் புவி வட்டப்பாதையில் பயணம் செய்தார் என்பது வரலாற்றுப் பதிவாகும். இன்று உலகின் பல நாடுகளும், செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தும் திறன் பெற்றுள்ளன.

### விண்கலம்

"திடுதிடுவென்று பூமி நடுங்கும் சப்தம். ஜன்னல்கள் அதிர ஏதோ ஒரு சோம்பேறி ராட்சசன் போலப் புறப்பட்டு வாலில் ஆரஞ்சு ஒளி, ஆரஞ்சுக்குள் வெண்மை நெருப்பு, அதற்குள் சிறிய வெண்மை. என்று நடுவானத்தில் ஒரு செங்குத்து கவிதை போல ராக்கெட் உயர்த்து உயர்ந்தது". வானத்தில் ஒரு மௌனத்தாரகை என்னும் சிறுகதையில், எழுத்தாளர் சுஜாதா விண்வெளி ஏவுகளை அமைப்பையும், அதன் செயல்பாடுகளையும் விவரித்துள்ளார்.

### விண்வெளி ஆய்வு மையம்

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (ISRO) இன்று பல சாதனைகளைப் புரிந்து வருகின்றது. நிலவில் தண்ணீர் உள்ளது என கண்டுபிடித்த சந்திராயன் திட்டம் செயற்கைக்கோள் அறிவியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. விண்ணில் செலுத்தப்படும் செயற்கைக் கோள்களின் உதவியால் மழை, காற்று, சூறாவளி, வெள்ளம் குறித்த வானிலைத் தகவல்களைத் துல்லியமாகப் பெற முடிகின்றது.

கல்விப்பணியிலும் செயற்கைக்கோளின் பயன்பாடு குறிப்பிடத்தக்கது. பிற கோள்களில் உயிரினங்கள் வசிப்பது குறித்த ஊடகங்களை அறிவியல் சிறுகதைகள் எடுத்தோதுகின்றன.

சுஜாதாவால் எழுதப்பட்ட "நேற்று வருவேன்" என்னும் சிறுகதையானது, வேற்றுலகப்பெண் ஒருத்தி பூமிக்கு வந்து எழுத்தாளர் ஒருவரைச் சந்திக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அறிவியல் புனைகதைகள் எழுதும் எழுத்தாளர் ஒருவரின் இல்லத்திற்கு வருகைதரும் ஒரு பெண், அவர் எழுதி வரும் கதைகளின் அடிப்படைச் செய்திகளாக விளங்கும் வேற்றுலக உயிரினங்கள் பற்றிய அவருடைய கருத்தை வினவுகிறாள். அவர் கூறும் செய்திகளை அவள் குறித்துக்கொள்கிறாள். அவரது எண்ண ஓட்டங்களை அவளால் எளிதில் புரிந்துகொள்ள முடிகின்றது. பிறகோள்களில் உயிரினங்கள் வாழக்கூடிய சாத்தியக் கூறுகள் குறைவாக உள்ளன என்னும் அவரது கருத்திற்கு, அப்பெண் தனது மறுப்பைத் தெரிவிக்கின்றாள்.

"எத்தனையோ கோடி கோடிக்கணக்கான நட்சத்திரங்கள், அவைகளுக்கு உண்டான கிரகங்கள், உபகிரங்கள் இருக்கறப்ப அதில எதிலயாவது ஒண்ணுல உயிர் இருக்க முடியாதா சொல்லுங்க! இருந்தாலும் அந்த உயிர் மனித வடிவுல இருக்குமாங்கறதுதான் பிரச்சினை. பூமியில் கார்பன், நைட்ரஜன், ஆக்ஸிஜன் அதிகமா இருக்கறதால இவைகளைச் சார்ந்து பூமியில உயிர் வடிவம் ஏற்பட்டது. மற்ற கிரகங்களில் உயிர்ங்க இருந்தாக்கூட இந்த மாதிரி ஆர்கானிக் வகையிலதான் இருக்கறதுக்கு விஞ்ஞானப்படி சாத்தியக்கூறு ரொம்பக் குறைவு". ஆசிரியரின் கருத்துக்களுக்கு, மதுமிதா என்னும் அப்பெண் கூறும் மறுப்புரைகளால் அவள் மீது அவருக்குச் சந்தேகம் எழ, அப்பெண்ணைப் பற்றிய விவரங்களை அவர், அவளிடம் வினவுகிறார். தான் ஆல்ஃபா நைன்ட்டி என்னும் கோளைச் சார்ந்தவள் என்றும், அவர்களது ஊரில் உள்ள நூலகத்தில் பூமி பற்றிய செய்திகளையும், அங்கு வசிக்கும் மனிதர்கள், எழுத்தாளர்கள் குறித்துப் படித்துவிட்டுப் பூமிக்கு வந்ததாக அப்பெண் கூறுகிறாள். அதைக்கேட்டு ஆசிரியர் வியப்பும், அதிர்ச்சியும் அடைவதாகக் கதை நிறைவடைகிறது.

சுஜாதாவின் "மற்றொரு பாலு", "விண்கோள்", "நேற்று வருவேன்" என்னும் சிறுகதைகள் விண்வெளிச் சிந்தனைகளை எடுத்துரைக்கின்றன. சுஜாதா அறிவியல் சிந்தனைகளை மக்களுக்கு விதைப்பதால் புதிய சிந்தனைகள் தோன்றுவதற்கான கூற்றினைப் பதியமிடுகிறார். சுஜாதா போன்ற அறிவியல் சிந்தனையாளர்கள், தங்களது படைப்புகளின் வழியாக வாசகர் என்ற பொதுத் தளத்தில் அறிவியலை முன்னெடுத்துச் செல்கின்றனர்.